# உலகத்தமிழ்

தேமதுரத் தமிழோசை உலகமெல்லாம் பரவும் வகை செய்தல் வேண்டும்

இதழ் - உ | திருவள்ளுவராண்டு 2050 | 18.12.2019


## இரண்டாம் உலகப்போருக்குப் பின்

***மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி மற்றும் தமிழ்ப்பண்பாட்டுத்துறை அமைச்சர் திரு.க.பாண்டியராசன் அவர்கள் இந்திய அலுவலர்கள் சங்கத்தின் 110 ஆம் ஆண்டு மாநாட்டின் தொடக்க விழாவில் பங்கேற்று ஆங்கிலத்தில் ஆற்றிய உரையின் தமிழாக்கம் பின்வருமாறு:-***

சென்ற இதழ் தொடர்ச்சி...

*"சீர்குலைவு என்றால் என்ன? சீர்குலைப்பவை என்றால் என்ன?" என எனக்கு நானே கேட்டுக்கொண்டேன். நீங்கள் உலக வரலாற்றைக் கவனித்தால், பெரும்பாலான சீர்குலைவுகள், உண்மையாகச் சொன்னால் அனைத்துச் சீர்குலைவுகளும் இரண்டு வேர்களைத்தான் கொண்டிருக்கின்றன; ஒன்று பிரெஞ்சு புரட்சி போல, புரட்சி என்றழைக்கப்படும் ஒரு சமூகச் செயல்பாடு அல்லது ஓரிரவில் உலகை மாற்றிய போர் போன்றவை.*

*உதாரணமாக உலக நிதி கட்டமைப்பில் முக்கிய மாற்றங்களை ஏற்படுத்திய, இரண்டாம் உலகப்போர், மூன்று ஆங்கிலேய நிறுவனங்கள் தோற்றுவிக்கப்பட்டன. ஒரு சீர்குலைவுக்குப் பின் பல நிகழ்வுகள் ஏற்படுகின்றன. இன்று சீர்குலைவு எனும் சொல் பெரு நிறுவன உலகில் பயன்படுத்தப்படுறது. நிருவாகத்தில் இச்சொல் மிகத் தாராளமாக, தொழில்நுட்பம் சார்ந்த சீர்குலைவைக் குறிப்பதற்கும் பயன்படுத்தப்படுகிறது.*

*தாமஸ் ஃபிரீட்மேன் " உலகம் தட்டையானது"* (The World is flat) *என்ற புத்தகத்தில் 1989 ஆம் ஆண்டு முதல் 2004 ஆம் ஆண்டு வரையிலான காலத்தில் ஏற்பட்ட 10 சீர்குலைக்கும் நிகழ்வுகளைக் குறிப்பிடுகிறார். கிழக்கு செருமனியையும் மேற்கு செருமனியையும் பிரித்த ஜெர்மன் சுவரின் வீழ்ச்சிக்குக் காரணமான அரசியல் சீர்குலைவில் தொடங்கி, 10 சீர்குலைவு நிகழ்வுகளைப்பற்றி இப்புத்தகம் பேசுகிறது.*

*இதை ஏன் சீர்குலைவு என அவர் குறிப்பிடுகிறார் என்றால், சுவர் இடிந்து ஆறு ஆண்டுகளுக்குள் 48 மாகாணங்கள் உருவானதாக அவர் கூறுகிறார். விழுந்தது ஒரு சுவர் மட்டுமல்ல, ஒரு கருத்தியலே. இந்த 10 முக்கிய சீர்குலைவுகளைப் பற்றி அவர் பேசும் இப்புத்தகத்தை இவ்வாறுதான் தொடங்குகிறார்.*

**வளரும்...**

"யாமறிந்த மொழிகளிலே
தமிழ் மொழி போல்
இனிதாவது
எங்கும் காணோம்"

— பாரதியார்





**திரு.க.பாண்டியராசன்**

*தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ்ப்பண்பாட்டுத்துறை அமைச்சர்*





தமிழ்ப் பண்பாட்டின் அடையாளம் - பெருவுடையார் கோயில், தஞ்சாவூர்

# உலகளாவிய தமிழ் அமைப்புகள்



முனைவர்
வா.மு.சே.முத்துராமலிங்க ஆண்டவர்
தமிழ் இணைப்பேராசிரியர்,
பச்சையப்பன் கல்லூரி, சென்னை.

சென்ற இதழ் தொடர்ச்சி...

சங்கக் காலச் சமுதாயம் குலங்களாகவும், குடிகளாகவும் இருந்து, சேர, சோழ, பாண்டியர்கள், கடையெழு வள்ளல்கள், வேளிர்கள் என அமைந்து பின்னர் அரசு உருவாக்கம் ஏற்பட்டுத் தமிழரின் மொழி கடந்த சிந்தனைகள் கணியன் பூங்குன்றனார் உள்ளிட்ட புலவர் பெருமக்களால் மற்றும் பல சான்றோர்களால் தொடர்ந்து கூறப்பட்டுள்ளன.

இத்தகைய உயர்ந்த சிந்தனைகளின் எழுச்சியாகத் தான் உலகளாவிய தமிழ் அமைப்புகள் உருவாகின.

இந்த உலகளாவிய தமிழ் அமைப்புகள் என்ற தலைப்பில் தொடர்ந்து ஆய்வுச் சிந்தனைகளை வழங்க உள்ளோம்.

உலகத் தமிழ் ஆராய்ச்சிக்கழகம், உலகத் தமிழ் கழகம், உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம், உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கம் எனப் பல்வேறு அமைப்புகள் உலகளாவிய சிந்தனையோடு, மொழி, கலை, இலக்கியம், பண்பாடு, உறவுநிலை, தமிழ்க்கல்வி, வேலை வாய்ப்பு இன்னும் பல பொருண்மை நோக்கில் அவையாவையும் செம்மையாகவும், செழுமையாகவும் செயல்படுகிறதா என்பதை ஆராய்வது அடிப்படையான ஒன்றாகும்.

.....வளரும்

## ஆசிரியர் பகுதி

திருவள்ளுவர் செய்த திருக்குறள் பொதுமையானது.
“திருவள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு” என்றார் நம் மாக்கவி பாரதியார்.

“வள்ளுவன் தன்னை” என்ற தொடர், திருக்குறளைக் குறிப்பது. தான் வேறு தான் தந்த நூல் வேறு என்றில்லாமல் திருக்குறள் நூலைக் குறித்த தொடராகும்.

கல்லூரியில் நடத்தும் பாடங்களைக் குறித்துப் பேசிக்கொள்ளும்போது சேக்ஸ்பியர் வகுப்பு’ என்று பேசுவோம். இதனைக் “கருத்தா ஆகுபெயர்” என்பர்.

திருவள்ளுவர் வேறு, திருக்குறள் வேறு என்றில்லை. எனவே, திருக்குறளையே தானாக நின்று உலகத்திற்கு வழங்கிய பொதுமை என நாம் நினைந்து போற்றத்தக்கதாகும்.



உலகத்தமிழ், என்ற சிந்தனையில் பாரதியார் திருநாளில் வள்ளுவன் தன்னை என்று பாடியபோது தன்னை என்பது திருக்குறளே என்று மனத்திற்படுகிறது.

வாழ்க திருவள்ளுவம் !
வெல்க உலகப் பொதுமை !

## சயாமில் திருவெம்பாவை, திருப்பாவை

தாய்லாந்தில் மன்னர் முடி சூட்டிக்கொள்ளும்போது கடைப்பிடித்த மரபுகளில் திருப்பாவை, திருவெம்பாவை அந்நாட்டு மொழி ஒலிப்புக்கு ஏற்ப பாடிவருகின்றனர் என்ற செய்தியை தமிழகத்திற்கு அறிஞர் தெ.பொ.மீ. “சயாமில் திருவெம்பாவை, திருப்பாவை“ என்றே ஒரு நன்னூல் எழுதியது குறிப்பிடத்தக்கதாகும்.



## ஔவையார்

ஆத்திசூடி | ATTISUDI

| آثي سودي | 阿媞邱立

ആത്തി ചൂടി |

आत्तिचूड़ी | ఆత్తిఛూడి |

ಆಭೂಡಿ

அறம் செய விரும்பு

Love to do virtuous deeds

أحب أن تفعل خيرا

常保德行

ദാനധർമ്മം ചെയ്യാൻ ആഗ്രഹിക്കുക

धर्म निष्ट काम करना चाहें |

దాన ధర్మం చేయడంలో అక్కర చూపు

*ಧಾನ ಧರ್ಮ ಮಾಡೋದ್ರಲ್ಲಿ ಅಕ್ಕರೆ ನೋಡಿಸು*





## பிரெஞ்சு கலைக்கழகம்

முனைவர் ந.அருள், இயக்குநர், மொழிபெயர்ப்புத்துறை



சென்ற இதழ் தொடர்ச்சி...

எத்திசையும் புகழ்மணக்க இருந்த சீரிளமைத்திறம் குன்றாத தமிழணங்கே என்று நாம் போற்றுவது போலவே பிரெஞ்சு மொழியைப் பேரழகு ததும்பும் பெண்ணரசியாக - இலக்கிய வித்தகர் விக்டர் யூகோ எழுதியது நம்மை வியப்பில் ஆழ்த்தும்.

"பிரெஞ்சு மொழி ஒரு பெண். இந்தப் பெண் மிக அழகானவள், மிகக் கர்வமானவள், மிக அடக்கமானவள், மிகத்துணிவானவள். மிக உணர்ச்சியானவள், மிக வனப்பானவள், கற்புள்ளவள், மிக உயர்வானவள், மிகப்பழக்கமானவள், மிகச் செருக்கத்தனமானவள், மக அறிவானவள், ஆழ்ந்த ஆத்மப் பூர்வமாக அவளை நேசிக்கும் நாம் அவளுக்கு நன்றி ஊட்டுபவளாக ஒருபோதும் முயன்றதில்லை" என்று அறிஞர் அனடோல் பிரான்ஸ் குறிப்பிட்டது இங்கு நினைவுகூரத்தக்கது.

பிரான்சு பற்றிய அனைத்தும் பெருமையானவை, அருமையானவை. இதற்கு ஒப்பாக எந்த நாடும் இல்லை என்று இணங்கியும் பிணங்கியும் வாழும் இங்கிலாந்து நாட்டு அறிஞர் கோல்ட் ஸ்மித் குறிப்பிட்டார்.

கோவேந்தர்களும், குறுநில மன்னர்களும், கோமான்களும், வேளிர்களும் பிரெஞ்சுப் புரட்சிக்கு முன்னால் ஆர்ப்பாட்டம் செய்திருந்த நாடு. எனவே காணும் இடமெல்லாம் அவர்கள் கட்டியிருந்த மாட மாளிகைகள், கூட கோபுரங்கள், அரண்மனைகள், கோட்டை கொத்தளங்கள், வளமனைகள், ஒப்பற்ற பூங்காக்கள், ஓங்கிய மரங்கள் சூழ்ந்த விடுதிகள், வாவிகள், சோலைகள், எங்குப் பார்த்தாலும் எழிலார்ந்த சிற்பங்கள், உன்னத ஓவியங்கள், நீல விதானம் போன்ற திரைச் சீலைகள், நித்திலப் பந்தர், கால் பதிக்கக் கூசும் கம்பள விரிப்புகள், அணிகள், அறைகலன், பால்நிலப் பளிங்கால் அமைத்த தரைகள் எனக் கற்களின் காவியங்களையே எங்கும் காண முடிகிறது.

தொடரும்...

## உலகத்தமிழ் மின்னிதழ் தொடக்கம் குறித்து தெக்கான் குரோனிக்கல் நாளிதழில் 12.12.2019 அன்று வெளியான செய்தி



# TN launches ePortal, eMagazine for chronicling global Tamil developments

DC CORRESPONDENT
CHENNAI, DEC 12

A new global initiative to highlight and chronicle developments related to Tamil language, literature and cultural aspect, an ePortal and eMagazine, 'Ulagathamil', from all parts of the world has been launched here under the auspices of the Tamil Nadu government's department of Tamil Development and Culture.

After widespread consultations with various stakeholders, the eMagazine, was launched by the State Tamil Language and Culture minister, MaFoi K Pandiyarajan, at a function in the city on Wednesday coinciding with the birth anniversary of the great Tamil Nationalist poet Subrahmanya Bharathi.

The ePortal and the eMagazine, will provide a platform to support a wide range of activities connected with Tamil language and development in various countries of the world and the eMagazine will be updated once every week, sources said.

Tamil being an ancient, unique classical language, which has grown independently of other linguistic traditions has a vast and rich repertoire of literature right from the Sangam period classical literature, Thiruvalluvar, the five great Epics in Tamil, the works of poet Kambar, 'Periya Puranam' which chronicles the lives of 63 Shaiva Nayanmaargal, right down to modern Tamil literature including Bharathi and Bharathidasan. The world-view thus reflected by Tamil literature has been universal in scope, reflecting the dreams and aspirations of a global fraternity.

With facets and activities related to Tamil literature, music, aesthetics and culture spread over as many as 167 countries in the world, Mr. Pandiyarajan said it was in the fitness of things that in the digital age, an ePortal and an eMagazine to chronicle all these developments on platform was being launched here.

This 'Ulagathamil' emagazine will grow into another distinguishing mark of Tamil language, literature and culture, like 'Sanga Thamizh', 'Mummai Thamizh' and 'Semmozhi Thamizh', he underscored.

Mr. Vijayaraghavan, director of Tamil Development department and Dr Avvai N Arul, director, Tamil Translation department, were among those who participated in the function.

சுருக்கம்

தமிழ் வளர்ச்சி – 28.06.2018 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 110–இன்கீழ் அறிவிப்பு – தமிழர்கள் அதிகமாக வாழும் வெளிநாடுகள் மற்றும் பிற மாநிலங்களில் உள்ள கல்வி நிறுவனங்களில் தமிழ் இருக்கை தொடர்ந்து நிறுவுதல் – அமெரிக்காவில் உள்ள ஹுஸ்டன் பல்கலைக்கழகத்தில் தமிழ் இருக்கை நிறுவுவதற்கு ரூ.1,00,00,000/–க்கு நிதி ஒப்பளிப்பு செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி(தவ 1.1)த் துறை

அரசாணை (நிலை) எண்.186

நாள் 17.12.2019
விகாரி, மார்கழி – 1
திருவள்ளுவராண்டு – 2050

---

ஹுஸ்டன் பல்கலைக்கழகம் *1927*-இல் தோற்றுவிக்கப்பட்டது. இப்பல்கலைக்கழகம் டெக்சாசில் உள்ள பெரிய பல்கலைக்கழகம் ஆகும்.

ஹுஸ்டன் தமிழ் ஆய்வுகள் இருக்கை அமைப்பு *2019* ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் முதல் நாளன்று தோற்றுவிக்கப்பட்டது.



**மக்களாட்சியின் மாண்பு**

*மக்களாட்சியின் இயக்கம் மனித மனங்களில் தான் மலர்ந்து மணம் பரப்பவேண்டும். எதனையும் எதிர்மறையாகக் காண்பதும் எதிர்நிலை எண்ணங்களையே எப்போதும் பரப்புவதும் நாட்டிற்கு நல்லதில்லை.*

*மோதல்களுக்கு வித்திடும் எந்த வீச்சுக்கும் இடங்கொடாமல் ஆக்கச் சிந்தனைகளுக்கு அரவணைப்புக் காட்ட வேண்டும். இருபது இருபதை ( 2020 ) கைநீட்டித் தொடப்போகும் எதிர்காலத்தில் இந்தியா வல்லரசாகவும் - தமிழர்கள் வல்லமை வாய்ந்தவர்களாகவும் திகழ வேண்டும்.*

*- மரபின் மைந்தன் முத்தையா*
*நமது நம்பிக்கை.*

**திருநாவுக்கரசர் உழவாரப்பணி மன்றம் நடத்தும் பெரியபுராணத் தொடர் சொற்பொழிவு தொடக்க விழா.**

*இடம் : பாடி சிவன் கோயில்*
*நாள் : 18.12.2019 மாலை 06.00 மணி*

**சாகித்திய அகாதெமி நடத்தும் 'பெண்மையச் சிறுகதைகள்' - புத்தக மதிப்புரை நிகழ்ச்சி.**

*இடம் : சாகித்திய அகாதெமி குணா வளாகம், இரண்டாவது தளம், 443, அண்ணா சாலை, தேனாம்பேட்டை - சென்னை - 18.*
*நாள் : 18.12.2019, 19.12.2019, மாலை 05.00 மணி*

**தமிழ் இசைச் சங்கம் நடத்தும் தமிழ் இசை 77 ஆம் ஆண்டு விழா - தொடக்க விழா**

*இடம் : இராஜா அண்ணாமலை மன்றம், சென்னை - 108.*
*நாள் : 21.12.2019, மாலை 06.00 மணி*

**தமிழ்ப் பேரவை நடத்தும் உவமைக் கவிஞர் சுரதா 99 ஆம் பிறந்தநாள் விழா மற்றும் உலகத்தமிழ்க் கவிஞர் பேரவை கரூர் மாவட்டத் தொடக்க விழா**

*இடம் : கிராமியம் அரங்கம், பேருந்து நிலையம் அருகில், குளித்தலை.*
*நாள் : 21.12.2019, மாலை 05.30 மணி*

**அறவாணன் ஆராய்ச்சி அறக்கட்டளை நடத்தும் பேராசிரியர் க.ப.அறவாணன் முதலாம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு.**

*இடம் : இலயோலா கல்லூரி, சென்னை - 34.*
*நாள் : 21.12.2019, மாலை 04.30 மணி*

**புதுக்கோட்டை இலக்கியப் பேரவை நடத்தும் எழுபெரும் விழா**

*இடம் : மாவட்ட வர்த்தகக் கழக சில்வர் அரங்கம், தலைமை அஞ்சலகம் அருகில், மேலராஜவீதி, புதுக்கோட்டை - 1.*
*நாள் : 22.12.2019, காலை 10.00 மணி*

**புதுச்சேரி சிந்தனையாளர்கள் பேரவை நடத்தும் சிந்தனையரங்கம்**

*இடம் : ஜோதி கண் பராமரிப்பு மையம், வைசியாள் வீதி, புதுச்சேரி.*
*நாள் : 22.12.2019, மாலை 06.00 மணி*



**கலைமாமணி, இன்னிசைத் திலகம், சூர்யபிரகாஷ்—மார்கழி இசை மழை**

*18.12.2019—மாலை 04.00 மணி*
சென்னை கல்சுரல் அகாதமி

*21.12.2019—காலை 10.00 மணி*
ஸ்ரீபார்த்தசாரதி சுவாமி சபா

*22.12.2019—மாலை 04.45 மணி*
கர்நாடிக் குளோபல் ஹெறிடேஜ், திருவான்மியூர்.

**18.12.2019**







**20.12.2019**




**21.12.2019**



# 'உலகத்தமிழுக்கு' வரப்பெற்ற கருத்துரைகள்

நண்பா. செம்மொழிப்பாடல் போல உங்கள் முயற்சியில் உலகத்தமிழ் மின்னிதழ் தொடக்க நிகழ்வுக்கு ஓர் அறிமுகப் பாடல் தேவை.
--- திரு.கண்ணு சிவகுமாரன், மலேசியா.

**Best Wishes/ Great**
**---- Ganapathy Subramanian, London.**

மிக்க மகிழ்ச்சி வாழ்த்துகள். சகோதரா வாழ்க தமிழ்.
--- திருமதி.அம்பாள் அடியாள், ஜெர்மனி.

பண்பாடுதுறை அமைச்சர் என்பது சரியா?
---- முனைவர் தாமரைக் கண்ணன்,
தமிழ்ப்பேராசிரியர், மாநிலக்கல்லூரி, சென்னை.

மலையாளத்தில் ஆத்திசூடி என்பதற்கு மாறாக, ஆத்திச்சூடி என்று தலைப்பிடப்பட்டுள்ளது. ஒற்று நீக்கிப் பதிப்பித்தல் சிறப்பு.

--- பேராசிரியர் தெ.ஞானசுந்தரம்,
துணைத்தலைவர்,
மத்திய செம்மொழித் தமிழாய்வு நிறுவனம்,
சென்னை.

மிக்க மகிழ்ச்சி. தொடர்ந்திட வாழ்த்துகள்.
--- முனைவர் கண்ணன், செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்டம்.

மிகச் சிறப்பு ஐயா.
உலகத்தமிழ் இதழ், உலகத்தமிழரை இணைக்கட்டும்.
--- திரு.சுசீலா, தமிழ் வளர்ச்சித்துறை.

வாழ்த்துகள். பாராட்டுகள். தொடரட்டும் புதிய முயற்சிகள்.
நன்றி.
"Hail Thee, Glorious Tamil, adorned with lit-ware
scaling those scaled the sky threadbare"
Thus praised the turban fame Emperor of Poets
11.12.2019
On this Golden Day, reminding Bharathi's Birthday
The e-Magazine "ULAGATHAMIZH" launches its pompous procession sparklingly.
--- பொன்.சின்னதம்பி முருகேசன், மொழிபெயர்ப்பாளர்.

உலகத்தமிழ் மின்னிதழ், சிறப்பாக அமைந்துள்ளது. வாழ்த்துகள். தங்களுடைய கட்டுரையில் FRANCE என்ற பதத்திற்கு ஆறு விளக்கங்களை அளித்தது வியப்பிலாழ்த்தியது. அவற்றின் ஆங்கில சொற்களை அறிவிக்க விழைகிறேன். தமிழ் வரலாறு அறிந்திட நல்ல வாய்ப்பு.
--- திரு.காத்திகேயன், ஸ்பிக் நிறுவனம்,(ஓய்வு) தூத்துக்குடி.

சிறப்பான நாளுக்கு சிறப்பு சேர்க்கும் நிகழ்வு. வாழ்த்துகள் சார்.
--- க.பாசுகரன், பிரிவு அலுவலர், மொழிபெயர்ப்புத்துறை

அருமை. ஐயா. நன்றிகள்.
--- விசயலட்சுமி, உதவிப் பிரிவு அலுவலர்,
மொழிபெயர்ப்புத்துறை

மகாகவியின் பிறந்தநாள். உலகத்தமிழ் உலா வரும் முதல் நாள். உவகை. பேருவகை.
நன்று. மேலும் மேம்படுத்தலாம். வாழ்த்துகள்.
---- ரியாஸ், நடுப்பக்க ஆசிரியர், தினச்செய்தி நாளிதழ்.

அருமை ஐயா.
--- புவியரசு, உலகத்தமிழ்ச் சங்கம்,
மதுரை.

Superb Sir.
--- Nazeer, Chennai.

வாழ்த்துகள். என்போன்ற இளைஞர்களையும் இணைத்துக்கொள்ளுங்கள் ஐயா.
--- சந்திரசேகரன், ரோட்டரி கிளப்.

நன்று. வாழ்த்துகள்.
--- திரு.மாது, திருச்சி.

## ‘உலகத்தமிழுக்கு’ வரப்பெற்ற கருத்துரைகள்

மிகவும் அருமை சார். திட்டமிட்டு செயலாற்றுவதில் தங்களுக்கு நிகர் தாங்கள்தான்.
--- என்.திருச்செல்வன், துணை இயக்குநர், மொழிபெயர்ப்புத்துறை.

மிகவும் பிரமாதம் அருள்.
--- திரு.முத்தையா, காரைக்குடி.

மகிழ்ச்சி. வாழ்த்துகள்.
--- குமார். தினமலர்

வாழ்த்துகள்.
--- கவிஞர் இராசி.அழகப்பன்.

Awesome.
திருமதி.சுகன்யா ஸ்ரீராம்.

மிகச்சிறப்பு. வரவேற்பு.
— பேரா.மணவழகன், உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம்.

Great Congratulations.
_ மருத்துவர் மெய்கண்டான்.

மனமார்ந்த வாழ்த்துகள்.
--- திருமதி.வாசுகி கண்ணப்பன்.

உலகத்தமிழ் வெற்றி உலா வர வாழ்த்துகள் அண்ணா.
--- பேரா. வாணி அறிவாளன், சென்னைப் பல்கலைக்கழகம்.

மகிழ்ச்சி.
பேரா.அறவேந்தன், சவகர்லால் பல்கலைக்கழகம், புதுதில்லி.

மனமார்ந்த வாழ்த்துகள்.
--- திருமதி.வாசுகி கண்ணப்பன்.

வாழ்த்துகள் ஐயா. தேமதுரத் தமிழோசை உலகமெல்லாம் பரவ வேண்டும்.
--- முனைவர் அம்பை மணிவண்ணன்.

தம்பி. வாழ்க வாழ்க.
--- முனைவர் முத்துவேலு, சென்னை.

வாழ்த்துகள்.
--- முனைவர் அன்புச்செழியன், இயக்குநர் (பொறுப்பு)

உலகத்தமிழ் மின்னிதழ் வெற்றி உலாவாக தொடங்கட்டும்.
--- பிரபு, செந்தமிழ் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம்.

அருமை.
--- திருமதி.சாரதா நம்பி ஆரூரன்,

வாழ்த்துகள்.
--- பிந்து. செந்தமிழ் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம்.

வாழ்த்துகள். திசையெட்டும் மலரட்டும். உலகத்தமிழ்.
--- முனைவர் அண்ணா கண்ணன்.

வாழ்த்துகள்.
அருமை அருமை வாழ்த்துகள்.
--- பேரா.மு.இளங்கோவன், புதுவை